| STC. No.15/2025 | PW1: திரு. ரகுநாதன்,<br>த/பெ. திரு. கோபால் | 11.05.2026 |
|---|---|---|

(எதிரி ஆஜர். )

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் தற்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை டீ எஸ்டேட் வைத்துள்ளேன். எனது மனைவி பெயர் ரமாதேவி என்று சொன்னால் சரிதான். எனது மனைவி அரசு பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்தார் என்றால் சரிதான். தற்போது பணி ஓய்வு பெற்று விட்டார். எதிரி எந்த தேதியில் என்னிடம் அணுகி பணம் கேட்டார் என்றால் 30.04.2024ம் தேதிக்கு 6 மாதங்களுக்கு முன்பு என்னிடம் Pick-up வாகனத்தை சரி செய்ய பணம் கேட்டார்.

2. அந்த Pick-Up வாகனத்தை பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வாகனத்தை பற்றி விசாரிக்க நான் முயற்சி எடுக்கவில்லை என்றால் சரிதான். டி.கே.பெட் அமைந்துள்ள காலிகட் ரோடு கூடலூரின் மத்திய பகுதி என்றால் சரிதான். எதிரி வசிக்கும் கம்மாத்தி என்பது ஒர கிராமம் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் டி.கே.பேட்டையில் வாகனத்தை நிறுத்துவதற்கு எதிரிக்கு அவசியமில்லை என்றால் சரியல்ல.

3. டி.கே.பேட்டையில் எனது வீட்டிற்கு முன்புதான் Pickup வாகனங்களின் ஸ்டேண்ட் உள்ளது. பணம் கொடுப்பதற்கு என்னிடமோ அல்லது எனது மனைவியிடமோ உரிமம் உள்ளதா என்றால் நாங்கள் அந்த

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.05.11 19:02:18 +0530

மாதிரி கடன் கொடுப்பதில்லை. எதிரி வீட்டிற்கு வந்து பணம் கேட்டதால் கடன் கொடுத்தேன்.

4. எதிரி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும், எனது மனைவியிடம் வாங்கிய ரூ.40,000/— கடனுக்கு பிணையமாக வழக்கு காசோலையை எதிரி கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு இந்த விஷயமே தெரியாது. எனக்கு எதிரிக்கு பணம் கொடுக்கமளவுக்கு வசதியில்லை என்று சொன்னால் எனக்கு 10 ஏக்கரில் டீ எஸ்டேட் உள்ளது. ஐந்து வீடுகளை வாடகைக்கு விட்டுள்ளேன். சொந்தமாக புளியம்பாறையில் தோட்டம் உள்ளது. கேரளாவில் வீடு உள்ளது. எதிரி எனக்கு காசோலை கொடுக்காததால் அவருக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.05.11 19:02:23 +0530

**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**